**செப்டம்பர் – 04**

# TNPSC துளிகள்

- இந்திய விமானப்படையின் மருத்துவப் பிரிவு அல்லாத கிளையிலிருந்து ஏர் வைஸ் மார்ஷல் /வான்படை துணைத் தளபதி பதவியை அடைந்த முதல் பெண் அதிகாரியாக சக்தி சர்மா மாறியுள்ளார்.
- ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் உள்ள சிவாலிக் மலைகளில் லியோசெலஸ் கிராசிலிபால்பஸ் என்ற புதிய தேள் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.
  - இது ஹார்முரிடே குடும்பத்தைச் சேர்ந்தது, மேலும் இது கடல் மட்டத்திலிருந்து 1,655 மீட்டர் உயரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- நாகாலாந்தின் மெட்ஸிஃபேமா பகுதியில் டெட்ராகோனுலா நாகாலாந்தென்சிஸ் என்ற புதிய வகை கொடுக்கில்லா தேனீயை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
  - இது முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டு நாகாலாந்தை கௌரவிக்கும் விதமாக இந்த இனத்திற்கு நாகாலாந்தென்சிஸ் என்று பெயரிடப்பட்டது, இதன் மூலம் இந்தியாவில் அறியப்பட்ட கொடுக்கில்லா தேனீ இனங்களின் மொத்த எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது.
- குர்கானின் சந்து கிராமத்தில் அரிய வகை கூரிய வால் உள்ளான் (கலிட்ரிஸ் அக்குமினாட்டா) பறவை சமீபத்தில் கண்டறியப்பட்டது.
  - பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் இதன் நிலை எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம் (Vulnerable) என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் ஜவுளி நடவடிக்கைகள்




- கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கான அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியை 10% உயர்த்தி தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

- தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அரசின் பங்களிப்பு 8% லிருந்து 16% ஆக அதிகரிக்கும்.
- அரசு மற்றும் பல்வேறு தரப்பினரின் பிரதிநிதிகளைக் கொண்டு தமிழ்நாடு பின்னலாடை வாரியம் அமைக்கப்படும்.
- உயர்தர பட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை ஆதரிப்பதற்காக காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டு பூங்காவில் பட்டு ஏற்றுமதி வர்த்தக வசதி மையம் அமைக்கப்படும்.
- 1,000 கைத்தறி அலகுகளில் சூரிய ஒளியின் தகடுகள் அமைக்க 100% மானியம் வழங்கப் படும், அதே நேரத்தில் ₹1 கோடி செலவில் இயற்கை சாயகம் ஒன்று நிறுவப் படும்.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் ₹20 லட்சம் செலவில் திருபுவனம் பட்டுக்கான வடிவமைப்பு மையம் அமைக்கப்படும், மேலும் கரூரில் வீட்டு ஜவுளிகளுக்கான சிறப்பு மையம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது.

## வெற்றி கைவினை கலைஞர்கள் திட்டம்




- 25 பாரம்பரிய கைவினைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு 'வெற்றி கைவினை கலைஞர்கள் திட்டத்தை' (VKKT) செயல்படுத்த உள்ளது.
- பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதும், தமிழ்நாட்டின் பாரம்பரிய கைவினைப் பொருட்களுக்கு மதிப்பைக் கூட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- கைவினைஞர்களுக்கு 50% மானியத்துடன் ₹10 லட்சம் வரை கடன் உதவி வழங்கப் படும்.
- இத்திட்டம் கைவினைஞர்களுக்கு நிதி ஆதரவை வழங்குவதோடு, அவர்களின் பாரம்பரிய கைவினைத் தொழில்களின் வளர்ச்சிக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும்.
- பாரம்பரிய கைவினைப் பொருட்களின் வளர்ச்சி மற்றும் கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கும் நோக்கத்துடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## வெற்றி கரங்கள் திட்டம்

- வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்காக கட்டுமானத் தொழிலாளர்களுக்கு

சர்வதேச அளவிலான திறன் பயிற்சி வழங்குவதற்காக 'வெற்றி கரங்கள்' திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ், 1,000 பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ₹15 கோடி செலவில் சர்வதேச அளவிலான திறன் பயிற்சி வழங்கப்படும்.
- மேலும் 50,000 பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு கொத்தனார், தச்சு, மின்சாரம், குழாய் அமைத்தல் மற்றும் வண்ணம் பூசுதல் ஆகிய பணிகளில் ஏழு நாள் பயிற்சி வழங்கப்படும், மேலும் ஊதிய இழப்பு இழப்பீடாக நாள் ஒன்றுக்கு ₹800 வழங்கப்படும்.
- பதிவு செய்யப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான (Gig workers) விபத்து காப்பீட்டுத் தொகையை ₹10 லட்சமாக அரசு இரட்டிப்பாக்கும், மேலும் மின் இருசக்கர வாகனங்கள் வாங்கும் 1,000 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான வங்கி கடன்களுக்கான வட்டித் தொகையை அரசே ஏற்கும்.
- சென்னை மற்றும் கோயம்புத்தூர் பெருநகரப் பகுதிகளில் புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களுக்காக 50 தொழிலாளர் வசதி மையங்கள் மற்றும் தற்காலிக தங்குமிடங்கள் அமைக்கப்படும்.





# தேசியச் செய்திகள்

## 2026 ஆம் ஆண்டு குவாண்டம் உயிரி தொழில்நுட்பம் குறித்த தேசிய மாநாடு

- உயிரி அறிவியல் மற்றும் சுகாதாரத் துறையில் குவாண்டம் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகளை ஊக்குவிப்பதற்காக மும்பை இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT Bombay) 2026 ஆம் ஆண்டு குவாண்டம் உயிரி தொழில்நுட்பம் குறித்த தேசிய மாநாடு நடைபெற்றது.
- இது நோயறிதல், உயிரிமருத்துவப் படமாக்கல், மருந்து கண்டுபிடிப்பு, துல்லிய மருத்துவம் மற்றும் உயிரிஉணர்தல் ஆகியவற்றில் உள்ள பயன்பாடுகளில் கவனம் செலுத்தியது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) ஆதரவுடன் தேசிய குவாண்டம் திட்டத்தின் (NQM) கீழ் குவாண்டம் உணர்தல் மற்றும் அளவியலுக்கான மையமாக ஐஐடி மும்பையில் உள்ள QMet டெக் அறக்கட்டளை செயல்படுகிறது.
- குவாண்டம் உயிரியல், குவாண்டம் உயிரி உணர்விகள் மற்றும் உயிரிஉணர்தல் தொழில்நுட்பங்களை ஆய்வகங்களில் இருந்து தொழில்துறைக்கு மாற்றுவது ஆகியவை முக்கிய விவாதங்களில் அடங்கும்.




## சூரிய ஒளி மின்சக்தி அதிகப்படியான உற்பத்தித் திறன் அபாயம்




- 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இந்தியாவின் சூரிய ஒளி மின்னழுத்த (PV) தொகுதி உற்பத்தித் திறன் 233 ஜிகாவாட்டை (GW) எட்டியுள்ளது, இது அதிகப்படியான திறன் மற்றும் பலவீனமான மூல உற்பத்தி பற்றிய கவலைகளை எழுப்பியுள்ளது.
- இந்தியா 233 ஜிகாவாட் சூரிய ஒளி மின்னழுத்த தொகுதித் திறனைக் கொண்டிருந்தது, ஆனால் சுமார் 35 ஜிகாவாட் மின்கலத் திறன் மட்டுமே இருந்தது மற்றும் இங்காட் / உலோகக் கட்டி மற்றும் செதில்(wafer)/தகடுத் திறன் மிகக் குறைவாகவே இருந்தது, இது ஒரு பெரிய உற்பத்தி இடைவெளியைக் காட்டுகிறது.
- தொகுதித் தொழிற்சாலைகள் 35% முதல் 40% வரையிலான பயன்பாட்டில் மட்டுமே இயங்கி வந்தன, அதே நேரத்தில் மேலும் 135 ஜிகாவாட் திறன் திட்டமிடப்பட்டுள்ளது அல்லது கட்டுமானத்தில் இருந்தது.
- தரவு மையங்கள், பசுமை ஹைட்ரஜன் மற்றும் ஏற்றுமதிகள் 2030 ஆம் ஆண்டுக்குள் 17 ஜிகாவாட் முதல் 22 ஜிகாவாட் வரை சூரிய தேவைக்குச் சேர்க்கப்படலாம், ஆனால் இது எதிர்பார்க்கப்படும் உபரியை உள்வாங்காது.
- இந்தியா 2026 ஆம் நிதியாண்டில் சுமார் 4.5 ஜிகாவாட் சூரிய மின் தகடுத் தொகுதிகளை ஏற்றுமதி செய்தது, இதில் கிட்டத்தட்ட 97% அமெரிக்காவிற்குச் சென்றது, இது அதிக ஏற்றுமதி சார்பை உருவாக்குகிறது.
- சிறிய ஒருங்கிணைக்கப்படாத உற்பத்தியாளர்கள் மற்றும் பழைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவோர் அதிக அபாயங்களை எதிர்கொள்கின்றனர், அதே நேரத்தில் இந்தியாவின் தொகுதித் திறனில் 70%க்கும் அதிகமான பகுதியை TOPCon ஏற்கனவே கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தம் - துருக்கி




- பாதுகாப்பான மற்றும் அமைதியான விண்வெளி ஆய்வுக்கான கட்டமைப்பான ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தத்தில் இணைந்த 71வது நாடாக துருக்கி உருவெடுத்துள்ளது.
- ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டில் தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (NASA) மற்றும் அமெரிக்க வெளியுறவுத் துறை ஆகியவற்றால் தொடங்கப் பட்டது.
- இந்த ஒப்பந்தம் 1967 ஆம் ஆண்டு விண்வெளி ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிலவு, செவ்வாய் மற்றும் அதற்கு அப்பால் பாதுகாப்பான, வெளிப்படையான மற்றும் அமைதியான ஆய்வை ஊக்குவிக்கிறது.
- இதில் கையெழுத்திட்டவர்கள் அறிவியல் தரவுகளைப் பகிரவும், அவசர காலங்களில் விண்வெளி வீரர்களுக்கு உதவவும், விண்வெளி அமைப்புகளின் இயங்குதன்மையை மேம்படுத்தவும் உறுதியளிக்கின்றனர்.
- ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, பஹ்ரைன், ஓமன், ஜோர்டான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்குப் பிறகு, இந்த ஒப்பந்தத்தில் இணையும் ஏழாவது மேற்கு ஆசிய நாடு துருக்கி ஆகும்.
- துருக்கி தனது முதல் ஆளில்லா சந்திரப் பயணமான AYAP-1 ஐ உருவாக்கி வருகிறது, மேலும் விண்வெளி ஆய்வில் தனது திறன்களை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


# பொருளாதாரச் செய்திகள்

## GDP கணக்கீட்டு முறை மற்றும் முதல் காலாண்டு மதிப்பீடுகள்

- 2026-27 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான (Q1) திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு

உற்பத்தி (GDP) மதிப்பீடுகளை புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) விளக்கியுள்ளது.

- ❖ எதிர்மறையான 1.5% உற்பத்தி GVA (மொத்த மதிப்பு கூட்டப்பட்ட) பணவாட்டக் காரணி (Deflator) என்பது உற்பத்தி விலைகள் குறைந்தன என்று அர்த்தமல்ல; இரட்டை பணவாட்ட முறையின் கீழ் வெளியீட்டு விலைகளை விட உள்ளீட்டு விலைகள் வேகமாக உயர்ந்ததால் இது ஏற்பட்டது.
- ❖ 2026-27 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உற்பத்தியின் பெயரளவு GVA (Nominal GVA) 7.7% வளர்ந்தது, அதே சமயம் உண்மையான GVA (Real GVA) 9.2% வளர்ந்தது.
- ❖ 2022-23 ஆம் ஆண்டின் புதிய அடிப்படை ஆண்டு, மேம்படுத்தப்பட்ட தரவு ஆதாரங்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட குறிகாட்டிகள் காரணமாக 2025-26 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் தற்போதைய விலை GDP ₹86.05 லட்சம் கோடியிலிருந்து ₹80.00 லட்சம் கோடியாக திருத்தப்பட்டது.
- ❖ GDP பணவாட்டக் காரணி, நுகர்வோர் விலைக் குறியீடு (CPI) மற்றும் மொத்த விலைக் குறியீடு (WPI) ஆகியவை வேறுபடுகின்றன, ஏனெனில் அவை வெவ்வேறு பொருட்கள், சேவைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளன.
- ❖ கனிம விலைகளின் கடுமையான அதிகரிப்பு காரணமாக சுரங்கம் மற்றும் குவாரியின் உண்மையான GVA 2.4% சரிந்தது, அதே நேரத்தில் பெயரளவு GVA 22.3% அதிகரித்தது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## பவளப்பாறைகள் வெளுப்பு அச்சுறுத்தல்

- ❖ பன்னாட்டுப் பவளப்பாறை கண்காணிப்பு வலைத்தளம் (GCRMN) உலகின் பவளப் பாறைகளின் நிலை குறித்த தனது ஏழாவது அறிக்கையை வெளியிட்டது, இது பவளப் பாறைகள் வெளுப்பு நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படுவதைக் காட்டுகிறது.
- ❖ 1980-2009 ஆம் ஆண்டுகளின் குறிப்பு காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், உலகளாவிய கடினமான பவளப்பாறை பரப்பளவு சுமார் 9.5% குறைந்துள்ளது, 2010 முதல் பெரும் சரிவு காணப்படுகிறது.
- ❖ 2024 ஆம் ஆண்டில், 87% பாறைகள் முன்னோட்டமில்லாத வெப்ப அழுத்தத்தை அனுபவித்தன, அதே நேரத்தில் 42.6% பரவலான வெளுப்பு மற்றும் பவளப்பாறைகள் இறக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் அளவுக்கு கடுமையான வெப்ப அழுத்தத்தை எதிர் கொண்டன.
- ❖ மனிதனால் ஏற்படும் பருவநிலை மாற்றத்தால் தீவிரமடைந்துள்ள கடல் வெப்ப

அலைகள், பவளப்பாறைகள் குறைவதற்கு வலுவான உலகளாவிய உந்துசக்தியாக மாறியுள்ளன; பல பகுதிகளில் பாறைகள் மீட்கப்படும் கால அளவு சுமார் 10 ஆண்டுகளில் இருந்து 4 முதல் 6 ஆண்டுகளாக குறைந்துள்ளது.

- நான்காவது உலகளாவிய பவளப்பாறை வெளுப்பு நிகழ்வு 2023 ஆம் ஆண்டில் தொடங்கியது, மேலும் இது பதிவு செய்யப்பட்ட மிகக் கடுமையான மற்றும் பரவலான நிகழ்வாக இருக்கக்கூடும், அதன் முழுத் தாக்கம் 2024 ஆம் ஆண்டிற்குப் பிறகும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த மதிப்பீடு 1980 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் 36,886 பாறை தளங்களில் மேற்கொள்ளப்பட்ட 87,299 ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட 21.1 மில்லியன் அவதானிப்புகளைப் பயன்படுத்தியது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வெப்பநிலை உயர்வு குறித்த ஐ.நா. அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) ஒரு முக்கிய அறிக்கை, உலகம் சுமார் 2030-ஆம் ஆண்டில் 1.5°C புவி வெப்பமயமாதல் வரம்பைக் கடக்க வாய்ப்புள்ளது என்றும், ஆனால் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தத் தற்காலிக வெப்பநிலை உயர்வை மாற்றியமைக்க முடியும் என்றும் எச்சரிக்கிறது.
- பாரிஸ் ஒப்பந்தம் (2015), புவி வெப்பமயமாதலை 2°C-க்குக் கீழ் வைத்திருப்பதையும், தொழில்மயமாக்கலுக்கு முந்தைய நிலைகளை விட 1.5°C-க்குக் குறைவாகக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகம் ஏற்கனவே தொழில்மயமாக்கலுக்கு முந்தைய நிலைகளை விட சுமார் 1.4°C வெப்பமாக உள்ளது, மேலும் 1.5°C-ஐக் கடப்பது தீவிர வானிலை, கடல் மட்ட உயர்வு, பல்லுயிர் இழப்பு மற்றும் பிற பருவநிலை அபாயங்களை அதிகரிக்கக்கூடும்.
- புதைபடிவ எரிபொருட்களை விரைவாகக் கைவிடுதல் மற்றும் உமிழ்வுகளைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம், வெப்பமயமாதலை சுமார் 1.8°C-க்குக் கட்டுப்படுத்த முடியும், அதைத் தொடர்ந்து கார்பன் அகற்றல் மூலம் வெப்பநிலையை மீண்டும் 1.5°C அல்லது அதற்குக் கீழ் கொண்டு வர முடியும்.
- கார்பன் டை ஆக்சைடு அகற்றுதலில் மரம் நடுதல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுத்தல் ஆகியவை அடங்கும், அதே சமயம் பாறை சிதைவு மற்றும் கடல் காரத்

தன்மையை அதிகரித்தல் போன்ற தொழில்நுட்பங்கள் இன்னும் பெரிய அளவில் நிரூபிக்கப் படவில்லை.

- 1.5°C இலக்கை எட்டக்கூடிய தூரத்தில் வைத்திருக்க, அவசரமான உமிழ்வுக் குறைப்புகள், சர்வதேச ஒத்துழைப்பு, பருவநிலை நிதி மற்றும் வலுவான அரசியல் நடவடிக்கை ஆகியவற்றை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.




# மாநிலச் செய்திகள்

## மணிப்பூரில் 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பு

- மணிப்பூரில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளை மத்திய அரசு ஒத்தி வைக்கிறது.
- 1951-ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, மாநிலத்தின் தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) பணியை முதலில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்து உள்ளன.
- மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கு முன்பு, தேசிய குடிமக்கள் பதிவேட்டை (NRC) புதுப்பிக்க வேண்டும் என்று மணிப்பூர் மக்கள், குறிப்பாக மெய்தி, பாங்கல் (மெய்தி முஸ்லிம்கள்) மற்றும் நாகாக்கள் கோரிக்கை விடுத்தனர்.
- இம்பால் பள்ளத்தாக்கில் பெரும்பான்மையாக உள்ள மெய்திகள், 2027 மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியை எதிர்த்தனர்.
- மணிப்பூர் அரசு தொடர்ந்து தேசிய குடிமக்கள் பதிவேட்டிற்கு ஆதரவளித்து வருகிறது.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்பு, 1951-ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு தேசிய குடிமக்கள் பதிவேட்டைப் புதுப்பிக்கவும், மியான்மரில் இருந்து சட்டவிரோத குடியேற்றம் குறித்த கவலைகளை நிவர்த்தி செய்யவும் உத்தரவுகள் கோரி மணிப்பூர் உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- முன்னதாக, செல்வாக்கு மிக்க குகி-சோ சபை தேசிய குடிமக்கள் பதிவேடு கோரிக்கையை நிராகரித்து, மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியை வரவேற்றது.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு சீட்டுகளில் இருந்து தரவுகளை மாற்ற வேண்டிய தேசிய குடிமக்கள் பதிவேடு, 1951-ஆம் ஆண்டில் சுதந்திர இந்தியாவின் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் விளைவாக இது உருவானது.
- அனைத்து மாநிலங்களும் தேசிய குடிமக்கள் பதிவேட்டை (NRC) தொகுக்கக் கடமைப் பட்டிருந்தன, ஆனால் அது அசாமில் மட்டுமே செய்யப்பட்டது.

- இந்தியாவில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, 1948-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின் கீழ் நடத்தப்படுகிறது.
- அரசிதழில் ஒரு அறிவிக்கையின் மூலம் மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்கு உத்தரவிடும் அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் 7-வது அட்டவணைப்படி, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஒன்றியப் பட்டியலின் கீழ் வருகிறது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ், இந்தியப் பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகம் இந்தச் செயல்பாடுகளைக் கையாளுகிறது.




## கேரள உயர் நீதிமன்றத்தின் பெயர்

- கேரளா, 'கேரளம்' என மாறினாலும், கேரள உயர் நீதிமன்றம் (HCK) என்ற பெயர் அப்படியே நிலைத்திருக்கும்.
- கேரளாவின் பெயர் 'கேரளம்' என மாற்றப்படுவதால், கேரள உயர் நீதிமன்றத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது.
- உயர் நீதிமன்றத்திற்கான பெயர் திருத்தச் செயல்முறையானது, மாநில நிர்வாகத்தின் பரிந்துரையின் பேரிலும், மாநில நீதித்துறையின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னரும் நாடாளுமன்றத்தால் தொடங்கப்பட வேண்டும்.
- உயர் நீதிமன்றத்தின் பெயர் மாற்றமானது, நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய உயர் நீதிமன்றப் பெயர் திருத்தச் சட்டத்தின் மூலமாக மட்டுமே செய்யப்பட முடியும்.
- 2016-ஆம் ஆண்டில் சென்னை மற்றும் பம்பாய் உயர் நீதிமன்றங்களின் பெயர்களைத் திருத்துவதற்கான முன்மொழிவுகள் இருந்தபோதிலும், நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப் பட்ட திருத்த மசோதாக்கள் நிறைவேற்றப்படாமல், பின்னர் காலாவதியாகி விட்டன.
- மேலும், நீதித்துறையானது மாநில அரசின் ஒரு பகுதியாக இல்லை; அது ஜனநாயகத்தின் மூன்று தூண்களில் ஒன்றாகத் தற்சார்புடையது.

- மாநில அரசால் அறிமுகப்படுத்தப்படும் பெயர் மாற்றங்கள், உயர் நீதிமன்றத்தின் பெயரையோ அல்லது அதன் தன்மையையோ பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.
- அத்தகைய எந்தவொரு முடிவும் நாடாளுமன்றத்தால் தொடங்கப்பட வேண்டி இருக்கலாம்.
- அந்தந்த மாநிலங்களின் பெயர்களில் மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும், பம்பாய், கல்கத்தா, மெட்ராஸ் மற்றும் ஒரிசா உயர் நீதிமன்றங்களின் அசல் பெயர்கள் தக்க வைக்கப் பட்ட நிகழ்வுகளையும் நீதிபதி சுட்டிக்காட்டினார்.
- 1956 ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின்படி, திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தையும் மெட்ராஸ் மாநிலத்தின் மலபார் மாவட்டத்தையும் இணைத்து கேரளா மாநிலம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி எர்ணாகுளத்தை தலைமையிடமாகக் கொண்டு உயர் நீதிமன்ற கேரளா நிறுவப் பட்டது.
- திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு திருவனந்தபுரத்திலும், கொச்சிக்கு எர்ணாகுளத்திலும் உயர் நீதிமன்றமும், மலபார் மாவட்டம் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிலும் இருந்தன.
- 1949 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி திருவிதாங்கூர் மற்றும் கொச்சி சமஸ்தானங்கள் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, திருவிதாங்கூர்-கொச்சி உயர் நீதிமன்றம் எர்ணாகுளத்தை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★